சிவகங்கை நகர் சண்முகராசா கலையரங்கில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். மேடையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ, மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம். மணிமுத்து, நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரைஆனந்த், மாநில மாணவரணி இணைச்செயலாளர் திருமதி பூரண சங்கீதா மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள் .

தருமபுரி மாவட்டத்திற்கு மார்ச் 11 அன்று வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சார முன்னோட்டமாக கொண்டு மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று தருமபுரி மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற அவசர ஆலோசனைக் கூட்டத்தில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார். தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி பழனியப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழகச் செயலாளர், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் அரசு மருத்துவமனையில் பிறந்த

13 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்!

கடலூர், மார்ச் 7 -

கடலூரில் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா - மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்து நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்.

இது பற்றிய விவரம் வருமாறு:

திருவாரூரை பூர்வீகமாகக் கொண்டவர் 33 வயது பெண்மணி ,இவரும் இவரது கணவரும் சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை புரிந்து வந்துள்ளனர். மூன்று நாட்களுக்கு முன்பாக அந்தப் பெண்மணிக்கு ரத்த கொதிப்பு தொந்தரவுக்கான மருந்துகள் சென்னை தனியார் மருத்துவ மனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ..

பிரசவத்திற்காக தனது தாயார் வீட்டுக்கு ரயில் மூலம் சென்னையில் இருந்து திருவாரூர் சென்று கொண்டிருந்தார். ஆபத்தான பயணத்தை ரயில் மூலம் மேற்கொள்ளும் பொழுது திடீரென்று அவருக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு மயக்கம் அடைந்துள்ளார்..

கடலூர் 108 ஆம்புலன்ஸ் பிரிவினர் கடலூர் திருப்பாதிரிப்புலியூர் ரயில்வே நிலையத்தில் தயாராக காத்துக் கொண்டிருந்தனர் ரயில் கடலூரை வந்தடைந்தது பிளாட்பார்முக்கு அருகே நிற்காமல் பிளாட்பார்மை விட்டு தள்ளி நின்ற ரயிலில் இருந்த கர்ப்பிணி பெண்மணியை 108 ஆம்புலன்ஸ் பிரிவினர் ரயில்வே டிராக்கில் இறங்கி பாதுகாப்பாக மீட்டு கடலூர் தலைமை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர்.

கடலூர் அரசு தலைமை மருத்துவமனையைச் சார்ந்த மயக்கவியல் நிபுணர் டாக்டர் பாஸ்கரன் கடலூர் தாய் சேய் நலப்பிரிவு மருத் துவர் டாக்டர் பரமேஸ்வரி மற்றும் அவர்களது குழு இணைந்து மயக்கத்தில் இருந்த அந்தப் பெண்மணிக்கு அறுவை சிகிச்சை செய்தனர். பெண் குழந்தை பிறந்தது.

திருவாரூருக்கும் கடலூருக்கும் தொப்புள்கொடி பந்தமாக அமைந்த இந்த நிகழ்வை பொதுமக்கள் அனைவரையும் பாராட்டினர் . வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் சார்பாக, மார்ச் 1 பிறந்த அந்தக் குழந்தை உட்பட 13 குழந்தைகளுக்கு, கடலூர் கிழக்கு மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தங்க மோதிரம் அணிவித்து மகிழ்ந்தார்.

கடலூர் அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கும் மருத்துவமனை நிர்வாகத்திற்கும் பாராட்டுகளை தெரிவித்தார் .

இந்நிகழ்வில் கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, மாநகர மேயர் சுந்தரி ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சுப்பிரமணியன், டி.காசிராஜன், மாநகர அவைத் தலைவர் பழனிவேல், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் கலைகோவன், மண்டல குழு தலைவர்கள் சங்கீதா பிரசன்னா, சங்கீதா செந்தில் முருகன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர் கணேசன், பகுதி செயலாளர் சலீம், இளையராஜா, நடராஜன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் பெரிய சாமி, மாமன்ற உறுப்பினர்கள் ஆராமுது, பாலசுந்தர், சுதா, விஜயலட்சுமி, செந்தில் குமாரி, பார்வதி, கிரேசி அகஸ்டின், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.எஸ்.ஆர். பாலாஜி, தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைபாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திக், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெயச் சந்திரன், குப்புராஜ், ராம்குமார்,

கோபி, மாநகர பொருளாளர் ராஜேந்திரன், மாநகர துணைச் செயலாளர் எல்சா, மாவட்டப் பிரதிநிதி சி.கே.என்.ராமு, சிவா, மாரி, துர்கா செந்தில், கி.கோ.செல்வமணி, மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ராஜராஜன், தகவல் தொழில்நுட்ப அணி பிரவீன், மாவட்டப் பிரதிநிதிகள் ரகுராம், லெனின், ஆறுமுகம், சிவா, வட்டச் செயலாளர்கள் முத்து குமரன், அருள்ஜீவன், விவேக், இளந்திரையன், அரங்கநாதன், ஆட்டோ செல்வம் தேவன்பு, பகுதி துணை செயலாளர் கேபிள் தமிழ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து மோடி ஒப்புதல் வாக்குமூலம்!

தி.மு.க.வை அழித்து விடுவோம் எனக் கூறியவர்கள் அழிந்து போனார்கள்!

திருச்சி பொதுக்கூட்டத்தில் சுப.வீரபாண்டியன் பேச்சு!

திருச்சி, மார்ச் 7 -

சென்னை இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவி உள்ளது என தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து மோடி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் -என திருச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில்சுப.வீரபாண்டியன் பேசினார்.

தி.மு.க திருச்சி மத்திய மாவட்டம் சார்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம் உறையூர் பகுதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநகராட்சி மேயரும் மாநகர செயலாளருமான அன்பழகன் தலைமை தாங்கினார். பகுதி செயலாளர் இளங்கோவன் வரவேற்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

தொகுதி உடன்பாட்டில் தி.மு.க. கூட்டணியிலும் இழுபறி இருக்கிறது பா.ஜ.க. கூட்டணியிலும் இழுபறி இருக்கிறது என கூறு கிறார்கள். இழுபறி இருப்பது உண்மைதான். ஆனால் நம் கூட்டணி கட்சிகள் அதிகமான தொகுதிகள் கேட்பதால் இழுபறி இருக்கிறது. ஆனால் பா.ஜ.க.விலோ அதிகமான தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்குகிறார்கள் ஆனால் கூட்டணி கட்சிகள் குறைவான தொகுதிகளிலேயே போட்டியிடுகிறோம் என்கிறார்கள். அதன் காரணமாக அவர்களிடம் இழுபறி இருக்கிறது. நம் கூட்டணி வெற்றி பெற போகிற காரணத்தால் அதிக எண்ணிக்கையில் கூட்டணி கட்சிகள் இடம் கேட்கிறார்கள். வெற்றி பெற போகும் கூட்டணி யின் தொகுதி உடன்பாடு இழுபறிக்கும் தோல்வி அடையப்போகும் கூட்டணியின் தொகுதி உடன்பாடு இழுபறிக்கும் வேறுபாடு இருக்கிறது.

சோதனை எலிகளாக நம்மைப் பார்க்கிறார்கள்!

இந்தியாவில் ஈனுலையை பா.ஜ.க ஆளும் மாநிலங்கள் அனுமதிக்க மறுத்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய வளர்ந்த நாடுகளே ஈனுலைகளை மறுத்துள்ளார்கள். மக்களுக்கு தீங்கு தரும் என வளர்ந்த நாடுகள் மூடிய ஈனுலையை தமிழ்நாட்டில் மோடி திறந்து வைத்துள்ளார்.

இந்தியாவின் வளர்ச்சிக்கு சென்னை உதவி இருக்கிறது என மோடி பேசி உள்ளார். அவர் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்புதல் வாக்குமூலமாக தந்துள்ளார். இந்தியாவிற்கு உதவும் மாநிலமாக தி.மு.க ஆளும் தமிழ்நாடு தான் இருக்கிறது.

மோடிக்கு வயிற்றில் புளி கரைப்பதால் தான் தமிழ்நாட்டிற்கு மாதத்திற்கு ஐந்து முறை வருகிறார். தி.மு.க வை பார்த்து அச்சத்தில் இருக்கிறார்கள்.

வட மாநிலங்களில் காவி கொடி சரிந்து வருகிறது. வரும் தேர்தல் பா.ஜ.கவிற்கு கடைசி தேர்தலாக இருக்க வேண்டும் இல்லையென்றால் அந்த தேர்தல் இந்தியாவிற்கே கடைசி தேர்தலாகிவிடும். அண்ணாமலை செய்தது நடைபயணம் அல்ல அது நடைப்பயிற்சி. தமிழ்நாட்டிற்கு வந்த மோடி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மக்களை சந்திக்கவில்லை. பல மாநிலங்களுக்கு செல்லும் மோடி மணிப்பூருக்கு செல்லவில்லை.

தி.மு.க.வை அழித்துவிடுவோம் எனக் கூறிய வர்கள் எல்லாம் அழிந்து போன வரலாறு மோடிக்குத் தெரியவில்லை.

ராஜாஜி, ம.பொ.சி, கல்யாணசுந்தரம் உள்ளிட்டோர் தி.மு.க வை அழிப்போம் என கட்சி தொடங்கினார்கள் ஆனால் அவர்கள் கட்சி தான் காணாமல் போனது.

சென்னை இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவி உள்ளது என மோடி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று அண்ணா கொண்டு வந்த இரு மொழிக் கொள்கை தான்.

பள்ளிகளை காமராஜர் திறந்ததை விட அதிகமான பள்ளிகளை கலைஞர் திறந்தார். பல்வேறு திட்டங்களை தொடர்ந்து தி.மு.க அரசு செய்து வருகிறது. இதையெல்லாம் பார்த்த பின் யாருக்கு புளியை கரைக்கும் என்பது இரண்டு மாதங்களில் தெரிந்து விடும். பொதுக் கூட்டத்தில் கொடுத்த வடை உண்மையான வடை, மோடி சுட்ட வடை பொய்யான வடை. தென்னாட்டில் மட்டுமல்ல வட நாட்டிலும் பா.ஜ.க விற்கு எதிராக தான் மக்கள் இருக்கிறார்கள்.

பா.ஜ.க கூட்டணியில் இருப்பவர்கள் தங்கள் கட்சியில் லட்சக்கணக்கான தொண்டர்கள் இருப்பதாக கூறினார்கள் ஆனால் திருச்சியில் நடந்த மாநாட்டில் அவர்கள் முன்னால் 60 பேர் தான் இருந்தார்கள்.

கலைஞர் மறைவுக்கு பின் வெற்றிடம் வரும் என்றார்கள் ஆனால் இன்று ஸ்டாலின் கலைஞரை விட பல வெற்றிகளை பெற்று வருகிறார். இப்படி கூறுவது கலைஞரை சிறுமைப்படுத்துவது ஆகாது மாறாக இது தான் ஒரு இயக்கத்தின் வெற்றி. ஒரு தலைவர் விட்டுச் சென்றதை மற்றொரு தலைவர் பன்மடங்காக செய்து வருகிறார். வரும் நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க கூட்டணி தான் வெற்றி பெறும் அதற்கு நாம் அனைவரும் உழைக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, காஜாமலை விஜி பகுதி செயலாளர்கள் நாகராஜ் மோகன்தாஸ் கமல் முஸ்தபா, அவை தலைவர் தர்மலிங்கம் மாநில மாணவரணி அமைப்பாளர் ஆனந்த் விஜயா ஜெயராஜ் கருணாநிதி செவந்தி லிங்கம் திருநாவுக்கரசு ஹரி சோழன் சம்பத் முத்து பழனி தர்ம சேகர் புத்தூர் தர்மராஜ் பவுல்ராஜ் காளை மகளிர் அணி அமைப்பாளர் கவிதா தொண்டரணி அமைப்பாளர் மதனா வாசுகி தலைமைக் கழக பேச்சாளர்கள் கருணாமூர்த்தி ராதாகிருஷ்ணன் ஆனந்தன் பழனி செல்வராஜ் சர்ச்சில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மும்பை புறநகர் மாநில தி.மு.க. நடத்திய

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

அலிசேக் மீரான் சிறப்புரை! பி.கிருஷ்ணன் தலைமை!

மும்பை, மார்ச் 7 -

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா மும்பை திலக் நகர் செம்பூரில் உள்ள தருண்பாரத் சேவா சங்க அரங்கில் நடைபெற்றது.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு.கழகத்தின் பொருளாளர் பி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற விழாவில் துணைச்செயலாளர் அ.இளங்கோ வரவேற்புரை ஆற்றினார்.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு.க. செயலாளர் அலிசேக் மீரான் விழாவில் எண்ணற்ற பெண்களுக்கு நலஉதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ-மாணவிகளுக்கு குறிப்பேடுகள், எழுது கோல்கள், வடிவியல் பெட்டிகளும் (Geometry boxes) வழங்கிச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புறநகர் தி.மு.க. துணைச் செயலாளர் முனைவர் வதிலை பிரதாபன் திராவிட கழகத் தலைவர் பெ.கணேசன், மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ.ஜைனுல்லாபுதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மும்பை மாநிலத் தி.மு.கழக அவைத்தலைவர் வே.ம.உத்தமன், புறநகர் தி.மு.க. இலக்கிய அணிப் புரவலர் சோ.பா.குமரேசன் டோம்பிவிலி கிளைச் செயலாளர் வீரை.சோ.பாபு இளைஞரணி துணை அமைப்பாளர் அமரன் உத்தமன், தோழர் கண்ணன்,

பிவண்டி கிளைப் பொருளாளர் முஸ்தாக் அலி,

வாஷி கிளைக்கழகம் சார்ந்த தில்லை, ஆறுமுகம், எம்.ஈ.முத்து, டி.சங்கர், குலசேகரன், ஜி.பசுபதிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் க.கணேசன், சங்கர் திராவிட், அ.பாலசுப்பிர மணியன், பூ.சு.அழகுராஜா, குரு, எம்.மலையாண்டி தாஸ், ம.பரமசிவன், அசைலன், ராணி,

அழகம்மாள், வீரம்மா, மாயா, சக்குபாய், காமாட்சி, சந்திரா, பிச்சையம்மா, பார்வதி, சின்னப் பொன்னு, மாதுரி, சந்திரகலா, அமுதா கிருஷ்ணன், ராஜேஸ்வரி, மாரியம்மா, சேக் அலாவுதீன், அஞ்சலை, சீத்தாராமன், திருநாவுக்கரசு, தினேஷ், வேலு, மணி, அறிவு, ராணி, அரவிந்த், ராதாகிருஷ்ணன், ஆனந்தன், சேகர், பட்டு, மீரா, ரேகா, சுரேந்தர், மணி, சைமன், பாக்யலட்சுமி, மாரியம்மா, செல்வக்குமார், அஞ்சனா, கமல், ராமு, விஜயா, நாகு, கமீலா ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று மகிழ்ந்தனர்.

நிறைவாக, செம்பூர் கிளைச் செயலாளர் நம்பி நன்றியுரை ஆற்றினார்.

உடுமலைப்பேட்டை போடிப்பட்டி, அருணா கலையரங்கத்தில்

1,205 பயனாளிகளுக்கு ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் விலையில்லா பட்டாக்கள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், மார்ச் 7 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1,205 பயனாளிகளுக்கு ரூ.2.09 கோடி மதிப் பீட்டில் விலையில்லா இ பட்டா, வன உரிமைப் பட்டா மற்றும் முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்ட அட்டைகளை வழங்கினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், போடிப்பட்டி, அருணா கலையரங்கத்தில் 04.03.2023 திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வருவாய்த்துறையின் சார்பில் உடுமலைப்பேட்டை வட்டத்திற்குட்பட்ட பள்ளபாளையம் கிராமத்தை சேர்ந்த 28 பயனாளிகளுக்கு ரூ.11.25 இலட்சம் மதிப்பீட்டில் இ பட்டாக்கள், எலையமுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள், இராவணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள், சின்னபாப்பனூத்து கிராமத்தை சேர்ந்த 40 பயனாளிகளுக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள், கொமரலிங்கம் கிராமத்தை சேர்ந்த 50 பயனாளிகளுக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள்,

பாப்பன்குளம் கிராமத்தைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள், மெட்ராத்தி கிராமத்தைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள், சங்கரராமநல்லூர் தெற்கு கிராமத்தை சேர்ந்த 80 பயனாளிகளுக்கு ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாக்கள், பூளவாடி கிராமத்தை சேர்ந்த 140 பயனாளிகளுக்கு ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் இ பட்டாக்கள் என மொத்தம் 468 பயனாளிகளுக்கு ரூ.2,09,25,000/ மதிப்பீட்டில் இ பட்டாக்களையும், 84 பயனாளிகளுக்கு வன உரிமைப் பட்டாக்களையும், 653 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவ கப்பீட்டு திட்ட அட்டைகள் என மொத்தம் 1,205 பயனாளிகளுக்கு ரூ.2,09,25,000/ மதிப்பீட்டலான பட்டாக்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன், உடுமலைப்பேட்டை நகர கழக செயலாளர் செ.வேலுச்சாமி, ஒன்றியக் கழக செயலாளர்கள் க.செந்தில்குமார், தி.செழியன், எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, உடுமலைப்பேட்டை நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின், அறங்காவலர் குழு த்தலைவர் மொடக்குபட்டி ரவி, உடுமலைப்பேட்டை ஒன்றியக்குழு பெருந்தலைவர் மாகலட்சுமி முருகன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மலர்விழி பாபு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனிதா செல்வராஜ், ஒன்றிய அவைத்தலைவர், எலையமுத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் கே.மாரிமுத்து, தளி பேரூர் கழக செயலாளர் வெ.உதயகுமார், போடிப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் சௌந்தர்ராஜன் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18